சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 24.06.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 107/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | நடராஜன் |
| தந்தை பெயர் | : | கண்ணப்பன் |
| கிராமம் | : | அண்டக்குடியான் தெரு, பில்லூர் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| மாவட்டம் | : | திருவாரூர் |
| தொழில் | : | வேலை எதுவும் இல்லை |
| வயது | : | 66 |

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

4 முதல் 6 , 8 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு சர்க்கரை வியாதி உள்ளதன் காரணமாக காலில் அப்ரேசன் செய்யப்பட்டுள்ளது. அதனால் எந்த வேலையும் செய்வதில்லை. வீட்டிலேயே உள்ளேன். நான் இதற்கு முன்பு இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியில் நன்னிலம் ஒன்றி செயலாளராக இருந்தேன். கடந்த 19.01.2011 ஆம் தேதி திருவாரூரில் உள்ள எனது கட்சி அலுவலகத்தில் இருந்தேன். அப்போது இரவு 7.30 மணியளவில் கட்சி அலுவலகத்திற்கு போன் வந்தது. நாவலன் என்பவரை கீழமாங்குடியில் பன்னீர்செல்வம் வகையரா வெட்டி கொன்று விட்டதாக கூறினார்கள். நான் தகவல் கிடைத்தவுடன் எனது இரு சக்கர வாகனத்தில் கீழமாங்குடி கிராமத்திற்கு சென்றேன். நான் அங்கு போகும் போது இறந்தவரின் மனைவி, மற்றும் ஒரு சில நபர்கள் இருந்தார்கள். கீழமாங்குடி சங்கர் வீட்டில் நாவலன் வெட்டுப்பட்டு மூளை சிதறி இறந்து கிடந்தார். இரவு 12.30 மணியளவில் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வந்தார். வந்த காவல் துணை கண்காணிப்பாளர் இறந்து போன நாவலனின் சடலம் இருந்த இடத்தை பார்வையிட்டார். வீட்டிற்கு வெளியே வந்து மற்ற இடங்களை பார்வையிட்டார். மேலும், அந்த வீட்டிலிருந்து வெளியே வந்து பார்க்கும் போது வீட்டிற்கு வெளியே ஒரு மின் கம்பம் இருந்தது. அந்த மின் கம்பத்திற்கு கீழே ஒரு நாட்டு வெடிகுண்டு இருந்தது. ரோட்டிற்கு அடுத்த பகுதியில் நாவலனும், ராஜாவும் வந்த இரு சக்கர வாகனம் இருந்தது.

அதையும் பார்வையிட்டார். மீண்டும் என்னையும், (அ.சா-9) வீரபாண்டியையும் அழைத்து சென்று வீட்டினில் இரத்த கரை படிந்த தரையை தோண்டி எடுத்தார். பக்கத்தில் இரத்த கரை படியா இடத்தையும் தோண்டி எடுத்தார். இரத்தம் படிந்த மற்றும் படியாத தரைகளை சேகரித்ததை பொறுத்து மகஜர் ஒன்று தயார் செய்தார். (அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள) மகஜரில் நானும், (அ.சா-9) வீரபாண்டியன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அதில் உள்ள முதலாவது கையொப்பம் என்றுடையது. இரண்டாவது கையொப்பம் வீரபாண்படியன் என்பவருடையது.

2. பின்னர் வீட்டிற்கு வெளியே வந்து மின் கம்பத்திற்கு கீழே இருந்த நாட்டு வெடிகுண்டை எங்கள் முன்னிலையில் மகஜர் ஒன்று தயார் செய்து கைப்பற்றினார். (அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள) மகஜரில் நானும், வீரபாண்டியன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அதில் உள்ள முதலாவது கையொப்பம் என்றுடையது. இரண்டாவது கையொப்பம் வீரபாண்படியன் என்பவருடையது.

3. சம்பவ இடத்தை பார்வையிட்டதற்காக என்னிடமும், வீரபாண்டின் என்பவரிடமும் கையொப்பம் பெற்றார். (அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள) பார்வை மகஜரில் நானும், வீரபாண்டின் என்பவரும் கையொப்பம செய்தோம். அதில் உள்ள முதலாவது கையொப்பம் என்றுடையது. இரண்டாவது கையொப்பம் வீரபாண்படியன் என்பவருடையது. அதன் பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் கையொப்பம் செய்த அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகஜரில் சம்பவம் நடந்த வீடு என குறிப்பிடப்படும் வீட்டில் உள்ள பொருட்கள் சேதம் அடைந்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நாவலன் என்பவரும், ராஜா என்பவரும் வந்தாக சொல்லக்கூடிய இரு சக்கர வாகனம் எதுவும், சம்பவ இடத்திற்கு அருகில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன நாவலன் என்பவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனம் எதுவும் இல்லை என்று சொன்னால் அந்த வாகனம் ராஜாவுக்கு சொந்தமானது. ராஜா என்பவருக்கும் சொந்தமாக இரு சக்கர வாகனம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நாட்டு வெடிகுண்டை கைப்பற்றும் போது தயார் செய்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ-4 ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைக்கு அடக்கமான நாட்டு வெடி குண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் நிறம், நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம் குறிப்பிடப்படவில்லை. போலீசார் அது நாட்டு வெடிகுண்டு என்று சொன்னதால் தான் போலீசார் நாட்டு வெடிகுண்டு என்று எழுதப்பட்ட பேப்பரில் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் அது நாட்டு வெடிகுண்டு என்று எனக்கு தெரியும். எனக்கு முதல் முதலாக இந்த சம்பவம் பற்றி சொன்னது யார் என்றால் திருவாரூர் கட்சி அலுவலகத்தில் இருந்தார்கள் சொன்னார்கள். நான் கையொப்பம் செய்ததாக சொல்லக்கூடிய அ.சா.ஆ-2 முதல் அ.சா.ஆ-4 வரையான மகஜர்களில் நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும், போலீசார் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த மேற்படி ஆவணங்களில் நான் காவல்

நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றும், வழக்கு சம்பவத்தில் இறந்து போன நாவலன் என்பவர் நான் சார்ந்துள்ள அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.06.24 18:13:25 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.